# நோயாளிக்குத தகவல்

## சிகிச்சை மருந்து:

# உயர் இரத்த அழுத்தம்

*பீட்டா புளோக்கர்ஸ்*



Medicine To Treat: Hypertension - **Beta Blockers**

## பீட்டா புளோக்கர்ஸ் எதற்குப் பயன்படுத்தப்படுகின்றன?

உயர் இரத்த அழுத்தத்தைக் கட்டுப்படுத்தவும், வழக்கத்திற்கு மாறான இதயத் துடிப்பு மற்றும் மாரடைப்பு போன்ற இதயக் கோளாறுகளுக்குச் சிகிச்சையளிக்கவும் பீட்டா புளோக்கர்ஸ் மருந்துகள் பயன்படுத்தப்படுகின்றன. ஒற்றைத் தலைவலி மற்றும் சிலவகை தைராய்டு சுரப்பிக் கோளாறுகளைக் கட்டுப்படுத்தவும் இவை பயன்படுத்தப்படுகின்றன. இதயத் துடிப்பின் வேகத்தை இவை தணிப்பதுடன் இதயத்தின் உயிர் வாயுத் தேவையையும் குறைக்கின்றன.

## பீட்டர் புளோக்கர்ஸ் மருந்துகளின் சாத்தியமான பக்கவிளைவுகள் யாவை?

பீட்டா புளோக்கர்ஸ் உட்கொள்பவர்களுக்கு களைப்பு, தலைசுற்றல், மரத்துப் போதல் அல்லது கை மற்றும் கால் விரல்களில் உறுத்தல் ஏற்படலாம். சில ஆடவர்களுக்கு ஓரளவு ஆண்மைக் குறையையும் ஏற்படுத்தக்கூடும்.

## எத்தகைய முன்னெச்சரிக்கை நடவடிக்கையை நான் எடுக்க வேண்டும்?

இந்த மருந்து ஆஸ்துமா தாக்குதலை துரிதப்படுத்தும் என்பதால், நீங்கள் ஆஸ்துமா தொடர்புள்ளவராக இருந்தால் உங்கள் மருத்துவரிடம் தெரிவித்துவிடவேண்டும். நீங்கள் கருவுற்றிருந்தால் அல்லது கருவுறத் திட்டமிட்டிருந்தால் இந்த மருந்தைப் பயன்படுத்துவதற்கு முன் உங்கள் மருத்துவரின் ஆலோசனையைப் பெற வேண்டும்.

## வழக்கமாகப் பயன்படுத்தப்படும் பீட்டா புளோக்கர்ஸ் மருந்துகள் யாவை?

- அட்டினோலோல்
- புரோப்ரானோலோல்
- மெட்டோபுரோலோல்
- கர்வேடிலோல்

## நான் ஒருமுறை மருந்தை பயன்படுத்த மறந்து விட்டால் என்ன செய்வது?

- அவ்வாறு மருந்தை உட்கொள்ள மறந்தால் உங்களுக்கு நினைவு வந்தவுடன் உட்கொண்டு விடுங்கள். ஒருசமயம் அடுத்த வேளைக்கான மருந்தை உட்கொள்ள வேண்டிய காலகட்டம் வந்துவிட்டால் வழக்கமான அளவை உட்கொள்ளுங்கள். மருந்தின் அளவை இரட்டிப்பாக்காதீர்கள்.

## என்னுடைய மருந்துகளை எப்படி பாதுகாக்க வேண்டும்?

- வேறு ஆலோசனை வழங்கப்பட்டிருந்தாலன்றி மருந்தை வெப்பம் குறைவான, ஈரமற்ற இடத்திலும் நேரடி சூரிய ஒளிபடாத இடத்தில் வைக்கவும்.
- அதற்குரிய ஒட்டுவில்லையுடைய உரைகலத்தில் வைத்திருங்கள். வெவ்வேறு விதமான மருந்துகளை ஒரே உரை, கலத்தில் சேர்த்து வைக்கக்கூடாது.

*காலாவதியான அல்லது இனியும் தேவைப்படாத மருந்துகளை ஒதுக்கி விடுங்கள்*

SingHealth

Ministry Of Health

National Healthcare Group

Printed in 2002